அந்தத் தொழிலை நடத்துகிறவர்கள் நூல் விலையேற்றம் வேறு சில காரணங்களினால் மிகவும் ஸ்தம்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய வருங்காலத்தை உத்தேசித்து அவர்களுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான காரியங்களை இந்த அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 12 கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தியாகிறது நம் மாநிலத்தில். இதில் 75% வெளி மாநிலங்களில் விற்கப்படுகிறது. நம் மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு முயற்சி எடுத்தால் அரசாங்கம் ஒத்துழைப்பு தரலாம். நூலைப் பொறுத்தவரையில் அப்போதைக்கப்போது விலை ஏறுகிற சமயத்தில் அரசு தலையிட்டு குறைந்த விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யலாம்.

மாயூரத்தில் தொழிற்பேட்டை

* 269 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்போது இல்லை.

வாலாஜாபேட்டையில் தொழிற்பேட்டை

* 270 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜா நகராட்சி எல்லையில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Bridge across Cooum near Poonamallee

* 271Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct a bridge across the Cooum on the road leading to Tiruverkadu near Poonamallee ;

(*b*) if so, the estimated cost of the bridge ; and

(*c*) the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ), (இ) & (உ) : மேற்கு பெருவழி தேசிய நெடுஞ்சாலையில் மைல் 10/4-ல் திருவேற்காடு அருகில் தேவி கருமாரி அம்மன் கோவிலுக்கு பிரியும் சாலையில் கூவம் ஆற்றின் குறுக்கே எழு இலட்ச ரூபாய் மதிப்பளவில் ஒரு மூழ்குப் பாலம் கட்ட அரசு பிப்ரவரி 71-ல் ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வேலையை செய்ய ஒப்பந்தம் முடிவு ஆகிவிட்டது. வேலை விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS